அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்

முதுநிலை சமூகப்பணி

இரண்டாம் பருவம்

களப்பணிக்கான வழிகாட்டு முறைகள்

முதுகலை சமூகப்பணி முதலாம் ஆண்டு இரண்டாம் பருவம் பயிலும் மாணவர்கள் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகிய களப்பணி பயிற்சி பெற்றிட வேண்டும். குறைந்தபட்சம் 20 நாட்கள் சமூகப்பணி நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனத்திற்கு சென்று களப்பணிப் பயிற்சி பெற வேண்டும்.

களப்பணியின் குறிக்கோள்கள்:

1. தொழிற்சார்ந்த அறிவு, திறமை மற்றும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதற்காக, ஒரு மேற்பார்வையாளரின் மேற்பார்வையில் மாணவர்கள் வாழும் சூழ்நிலையில் ஊடாட்டத்தை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமாக அறிந்து கொள்ளும் திறமையை உருவாக்குதல்.
2. மாணவர்கள் கோட்பாடுகளை செய்முறைகளுடனும், அனுபவத்தை கோட்பாடுகளுடனும் தொடர்புபடுத்துவதற்கான திறமையை ஆழமாக வளர்த்தல்.
3. பாகுபாடு பாராமை மற்றும் மதிப்பிட்டுக் கூறாமை போன்ற தொழிற் சார்ந்த குணநலன்களை வளர்த்துக் கொள்ளச் செய்தல்.
4. தொழிற்சார்ந்த மதிப்புகள், பொறுப்புகள் மற்றும் எண்ணங்களை வளரச்செய்தல்.
5. சிறிய மற்றும் மிகப்பெரிய சமூகப்பிரச்சனைகளை ஆய்வு செய்வதற்கும், தீர்த்து வைப்பதற்கான செய்முறை அனுபவங்கள் மூலமாக தொழிற்சார்ந்த திறமையை வளர்த்துக் கொள்ளுதல்.

சமூகப் பணி பயிற்சி பெற தகுதியுடைய நிறுவனங்கள்:

சமூக நலம் / சமூகப் பணியில் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்ற நிறுவனத்தை தேர்வு செய்ய வேண்டும்.

களப்பணிக்கு செல்லும் நிறுவனம் ஒரு அரசு சாரா நிறுவனம் / தொழிற்சாலை / மருத்துவமனை / மாற்றுத் திறனாளிக்கான சிறப்புப் பள்ளி / மத்திய மற்றும் மாநில நல நிறுவனம் / பகுதி மற்றும் முழுமையான அரசு நல அமைப்பாக இருக்க வேண்டும்.

களப்பணி பயிற்சி மேற்பார்வையாளருக்குரிய தகுதிகள்:

1. கல்லூரி / பல்கலைக்கழகத்தில் சமூகப்பணி / சமூகவியல் துறையில் 5 ஆண்டுகள் பேராசிரியராக பணியாற்றி இருக்க வேண்டும்.
2. சமூகப்பணித்துறையில் முதுகலைப்பட்டம் பெற்று அரசு சாரா நிறுவனங்களில் 10 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும்.
3. முதுகலைப் பட்டத் தகுதியுடன் ஏதாவது ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர் நல அலுவலர் / பணியாளர் மேலாளர் / மனிதவள மேலாளராக இருக்க வேண்டும்.
4. முதுகலைப்பட்டத் தகுதியுடன் சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர் / தலைமையாசிரியை
5. முதுகலைப்பட்டத் தகுதியுடன் மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவ சமூகப் பணியாளர் / மருத்துவ கண்காணிப்பாளர் / மனிதவள மேலாளர்.
6. அரசு நல அமைப்புகள் மற்றும் பகுதி அரசு நல அமைப்புகளில் பணியாற்றும் முதுகலைப் பட்டம் பெற்ற தலைமை / திட்டஅலுவலர் / திட்ட ஒருங்கிணைப்பாளர் /மேற்பார்வையாளர்கள்.

பொது அறிவுரைகள் :

1. களப்பணி ஆய்வு அறிக்கை **இரண்டு** தயார் செய்து அச்சடிக்கப்பட்டு அதன் ஒரு நகல் இயக்குநரகத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
2. வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி தகுதியான களப்பணி மேற்பார்வையாளரை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.
3. களப்பணி மேற்பார்வையாளரின் உதவியுடன் மாணவர்கள் களப்பணி பயிற்சி பெற வேண்டிய நிறுவனத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்.
4. களப்பணி செல்லவிருக்கும் நிறுவனத்தைப் பற்றிய தகவல் படிவத்தை இயக்குநகரத்திற்கு அனுப்பி வைத்து அனுமதி பெறவேண்டும்.
5. களப்பணி மேற்பார்வையாளர், நிறுவனம் போன்றவற்றை இயக்குநரகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத சூழ்நிலையில் வேறு மேற்பார்வையாளர் மற்றும் நிறுவனத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.
6. ஒரு மாணவருக்கு களப்பணி மேற்பார்வையாளராக பணியாற்றுவதற்கு மதிப்பூதியமாக ₹500/- வழங்கப்படும்.
7. ஒரு கல்வியாண்டில் ஒரு களப்பணி மேற்பார்வையாளர் 5 மாணவர்களுக்கு மேல் தொலைநிலைக்கல்வியகத்தில் வழிகாட்டியாக இருக்கக் கூடாது.

8. களப்பணி பயிற்சி அறிக்கை 40 முதல் 80 பக்கங்கள் வரை இருக்கவேண்டும்.
9. களப்பணி பயிற்சி அறிக்கை தயார் செய்யப்பட்டு மொத்தமான அட்டை கொண்டு பைண்டிங் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஸ்பைரல் பைண்டிங் செய்யப்படும் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்படாது.
10. களப்பணி பயிற்சி அறிக்கையுடன் / இத்துடன் இணைக்கப்பபட்டுள்ள சமர்ப்பித்தலுக்கான படிவத்தையும் இயக்குநரகத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒப்புதலுக்கான நகலையும் இணைத்து அனுப்பவேண்டும்.
11. களப்பணிப் பயிற்சி அறிக்கையில் களப்பணி மேற்பார்வையாளர் கையொப்பமிட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். அதில் இதற்கு முன் இவ்வறிக்கை வேறு எந்த நிறுவனம் / பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படவில்லை என்பதற்கான உறுதி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
12. 20 நாட்கள் களப்பணி பயிற்சி பெற்றதற்கான வருகைச் சான்றிதழ் நிறுவனத்தாரின் கையொப்பத்துடன் பெற்று அதனையும் இணைக்கப்பட வேண்டும்.
13. களப்பணி அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

இயக்குநர்,

தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர் - 608 002.

நிறுவனத் தகவல்கள் அடங்கிய படிவத்தை அனுப்பி வைக்க கடைசிநாள் : **30-10-2026**.

களப்பணி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள்: **31-12-2026.**

அபராதத்தொகை ₹500/- உடன் களப்பணி பயிற்சி அறிக்கை சமர்ப்பிக்க கடைசி நாள்: **15-01-2027.**

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்

களப்பணி

களப்பணி நிறுவனத்தை ஒத்துக்கொள்வதற்கான படிவம்

சேர்க்கை எண்:

1. மாணவரின் பெயர் மற்றும் முகவரி :

2. நிறுவனத்தின் பெயர் :

3. நிறுவனத்தின் முகவரி

தொலைபேசி எண் மற்றும்

இணைய குறியீட்டு அடையாளம் :

4. நிறுவனத்தின் செயல்பாடுகள்

(நிறுவனம் தொடங்கிய தேதியுடன்) :

மாணவரின் கையொப்பம்

தேதி :

களப்பணி மேற்பார்வையாளரின் கையொப்பம்

பெயர்:

கல்வி ஆண்டு:

மேற்பார்வையிடும் மாணவர்களின் எண்ணிக்கை:

இணைப்பு :

1. களப்பணி பற்றிய சுருக்கம்
2. களப்பணி மேற்பார்வையாளரின் சுயதகவல்கள்

அலுவலகம்

சரிபார்த்தல் ஒப்புதல்

தலைமை - சமூகவியல் பகுதி

இயக்குநர்

களப்பணி மேற்பார்வையாளரின் சுயதகவல்கள்

களப்பணி மேற்பார்வையாளர் புகைப்படம்

பெயர் :

கல்விதகுதி :

தற்பொழுது வகிக்கும் பதவி :

நிறுவனத்தின் பெயர் :

அனுபவம் :

அலுவலக முகவரி
தொலைபேசி மற்றும்
அலைபேசி எண்கள் :

வீட்டு முகவரி :

களப்பணி அறிக்கை

களப்பணி பயிற்சி அறிக்கை கீழ்கண்டவைகள் உள்ளடக்கியதாகும் :

1. உற்று நோக்கு அறிக்கை

2. தனிநபர் பணி அறிக்கை

3. குழுப்பணி அறிக்கை

உற்றுநோக்கு அறிக்கையின் மாதிரிப் படிவம்:

I.

1. சமூகப்பணி பயிற்சியாளர் பெயர்

2. நிறுவனத்தின் பெயர்

3. களப்பணி சென்ற நாள்

4. கல்வி நிறுவன மேற்பார்வையாளர்

5. களப்பணி நிறுவன மேற்பார்வையாளர்

II.

1. நிறுவனம் பற்றிய வரலாறு (அமைவிடம் உள்பட)

2. நிறுவனத்தின் குறிக்கோள்கள்

3. நிறுவனத்தின் அமைப்பு

4. அலுவலர்கள் முறை

5. நிதி ஆதாரங்கள், நிதி திரட்டும் முறைகள் ஆகியவை

6. திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்

7. பயன்படுத்தப்பட்ட சமூகப்பணிமுறைகள்

8. பயனாளிகளின் வாழ்க்கைமுறை மற்றும் சமுதாயம் முழுமையிலும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சேவைகள் ஏற்படுத்திய தாக்கம்

தனிநபர் பணி பற்றிய மாதிரிப் படிவம்

ஒரு மாணவர் 3 தனிநபர் பணிகளை களப்பணியில் செய்யவேண்டும்.

1. சிகிச்சைக்கு தேர்ந்தெடுத்தல்
   பயனாளியை தேர்ந்தெடுத்தல்
2. ஆய்வு / உண்மை அறிதல்

அ. பிரச்சினையின் தன்மை

ஆ. பயனாளியின் உணர்வுகள் மற்றும் வெளிப்பாடுகள்

இ. பிரச்சினைகளை தீர்க்க அவர் எடுத்த முயற்சிகள்

ஈ. சமூக சூழ்நிலையின் பாதிப்பு (குடும்பம்)

உ.பயனாளியின் உளவியல் - சமூக மேம்பாடு

ஊ. பயனாளியின் ஆளுமைத்திறன்

3. நோய் ஆய்வுறுதி / பிரச்சினையை அனுமானித்தல், சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஒரு விளக்கத்தை உருவாக்குதல்
4. சிகிச்சை
5. சிகிச்சைக்கு பிந்தைய கவனிப்பு
6. உறவினை முடிவுக்கு கொண்டு வருதல்

குழுப்பணி பற்றிய மாதிரிப்படிவம்

(ஒரு மாணவர் இரண்டு குழுப்பணி செய்தல் வேண்டும்.)

1. குழுவினை உருவாக்குதல்

குழுவின் தேவை மற்றும் வலிமை, குழுவின் செயல்களுக்கான நெறிமுறைகளை உருவாக்குதல் மற்றும் குழுவை செயல்களை நோக்கி திசை திருப்புதல்.

2. குழு பற்றிய முழுமையான தகவல்கள்

தனிப்பட்ட மற்றும் குடும்பம் பற்றிய தகவல்கள், தனி நபரின் பிரச்சினைகள்

3. குழு நடவடிக்கைகள்

களப்பணி அறிக்கை சமர்ப்பித்தலுக்கான படிவம்

(களப்பணி அறிக்கை சமர்ப்பிக்கும் போது அத்துடன் இணைக்கப்படவேண்டும்)

1. மாணவர் பெயர் :
2. பதிவு எண் :
3. பாடத்திட்டம் :
4. மாணவரின் முகவரி :
   (தொலைபேசி எண்ணுடன்)

மேற்பார்வையாளரின் பெயர் :

பதவி மற்றும் அனுபவம் :

மேற்பார்வையாளரின் முகவரி : 1.அலுவலகம்

2. வீடு

களப்பணி அறிக்கை சமர்ப்பிக்கும் தேதி:
தாமதமாக சமர்ப்பித்தால் அதற்கான அபராதத்
தொகை செலுத்தியது பற்றிய விபரங்கள்:

மாணவரின் கையொப்பம்

மேற்பார்வையாளரின் கையொப்பம்

இடம் :
தேதி :

இயக்குநர்
தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்(CDOE)